

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளை பயனாளிகளுக்கு நீர் வளத்துறை அமைச்சர் – கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, ஒன்றிய கழக செயலாளர் சி.ரவி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2025) நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் 1,000 இருக்கைகள் வசதியுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, காரம்பாக்கம் க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டல குழுத்தலைவர் இரா.துரைராஜ், செயலாளர் சி.சமயமூர்த்தி கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, நந்தனம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் உயர்கல்வித் துறை செயலாளர் சி.ஜோதி வெங்கடேசுவரன், மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2025) நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் 1,000 இருக்கைகள் வசதியுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டல குழுத்தலைவர் இரா.துரைராஜ், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, நந்தனம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சி.ஜோதி வெங்கடேசுவரன், மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.

### உலகெங்கும் வெறுப்பும் வன்முறையும் நீங்கி – நல்லிணக்கம் செழித்திட

# இயேசு பெருமகனாரின் போதனைகள் வழிகாட்டட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ஈஸ்டர்’ வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஏப். 21 –

“உலகெங்கும் வெறுப்பும், வன்முறையும் நீங்கி நல்லிணக்கம் செழித்திட இயேசு பெருமகனாரின் போதனைகள் வழி காட்டும்” என்று ‘ஈஸ்டர்’ வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்களின்ஈஸ்டர் வாழ்த்துச்செய்தி வருமாறு:

**அமைதி, பொறுமை, இரக்கம், இன்னா செய்தாருக்கும் நன்மையே செய்யும் நற்குணம் ஆகியவற்றின் பேருருவமான இயேசு பிரானின் வழியைப் பின்பற்றி நடக்கும் கிறித்தவப் பெருமக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் எனும் உயிர்ப்பு ஞாயிறு நாள் வாழ்த்துகள்!**

**உலகெங்கும் வெறுப்பும், வன்முறையும் நீங்கி நல்லிணக்கம் செழித்திட இயேசு பெருமகனாரின் போதனைகள் வழிகாட்டட்டும்!**

**அன்பே வெல்லட்டும், உலகை ஆளட்டும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டின் வெற்றியை உரக்கச் சொல்வோம்! இலட்சியப் பயணத்தில் வெல்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஏப். 21 - தொழில்முனைவோர் சுரேஷ் சம்பந்தம் அவர்கள் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் நம்பர் 1 மாநிலமாக திகழ்வதாக அளித்த பேட்டியை சுட்டிக்காட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தமிழ்நாட்டின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும்.

நமது வரலாறு நாளைய தலைமுறையை வடிவமைக்க வேண்டும்.

பொய்மைகளை உடைக்கவும், மெய்ப்பொருள் நாடுவோர்க்கும் மாற்றத்தைப் படைப்போர்க்கும் வழிகாட்டிடவும் உண்மையை உரக்கப் பேசித்தான் ஆக வேண்டும்.

தமிழ்நாட்டின் வெற்றியை உரக்கச் சொல்வோம்! இலட்சியப் பயணத்தில் வெல்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



விருதுநகர் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் திருச்சி சிவா எம்.பி., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.பி.சி.ராஜா, முன்னாள் எம்.எல்.ஏ வி.பி.ராஜன், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தனுஷ் குமார், இராஜபாளையம் ஆனந்த ராஜ், சாத்தூர் கார்த்தி, கார்த்தி , துணை அமைப்பாளர் பாபுஜி, ரவிக் கண்ணன், சாத்தூர் ஆனந்த், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணகுமார், முன்னாள் சேர்மன் சுப்பாராஜ் ஆகியோர் உள்ளனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மதுரை சித்திரை பெருவிழா2025 முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் இடத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் .மா.செள.சங்கீதா, மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் மாநகராட்சி ஆணையாளர் .சித்ரா விஜயன், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன், போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி , புதிய பேருந்துகள் துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா செள சங்கீதா , மதுரை மாநகராட்சி மேயர் த.இந்திராணி பொன் வசந்த் , மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன் , தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் கே.இளங்கோவன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு போக்குவரத்து கழகம் பணிமனையில் ”மகளிர் விடியல் பயணம்புதிய பேருந்துகள் துவக்க விழா, பணிமனையில் தரைத்தளம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் போக்குவரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்று உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ., நெல்லை அரசு போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குனர் தசரதன், நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன் உள்பட பலர் உள்ளனர்.